செ.வெ.எண்: 19 நாள்:20.12.2019

கரூர் மாவட்டம்

**தேர்தல் விதிமீறல்களை கண்காணிக்க 12 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது - மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளது. கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, முதற்கட்டமாக 27.12.2019 அன்று நடத்தப்படும் தேர்தலில் கரூர், தாந்தோணி, அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கும், இரண்டாம் கட்டமாக 30.12.2019 அன்று குளித்தலை, கிருஷ்ணராயபுரம், கடவூர் மற்றும் தோகைமலை ஆகிய ஊராட்சி ஒன்றியப்பகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது.

ஊரக உள்ளாட்சித்தேர்தலை முன்னிட்டு தேர்தல் விதிமீறல்கள் நடைபெறுவதை தடுக்கும் வகையில், தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஒரு குழுவும், பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு குழுவும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை ஒரு குழுவும் என இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சுழற்சி முறையில் பணியாற்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா 3 குழுக்கள் வீதம் மொத்தம் 12 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர்கள் நிலையிலான அலுவலர்கள் தலைமையில் செயல்படும் பறக்கும் படையினர் தொடர்ந்து 24 மணி நேரமும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதனடிப்படையில், கரூர் மற்றும் தாந்தோணி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திரு.ஏ.ஈஸ்வரன் (94439-54843), திருமதி.ஆர்.வித்யாவதி (80569-03727), திருமதி.பொ.சாந்தி(97519-42981) ஆகியோர் தலைமையிலான பறக்கும் படையினரும், அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமதி.கோ.யசோதா (94437-21059), திரு.க.மகுடீஸ்வரன் (94457-96408), திருமதி. வை.அமுதா (99445-31967) ஆகியோர் தலைமையிலான பறக்கும் படையினரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல, குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு திரு.மா.வேலுச்சாமி (94428-91533), திருமதி.விஜயா (91593-34945), திரு.கு.அருள் (86681-88040) ஆகியோர் தலைமையிலும், கடவூர் மற்றும் தோகைமலை ஆகிய ஊராட்சி ஒன்றயங்களுக்கு திரு.பெ.செந்தில்குமார் (72004-40680), திரு.ஆர்.சதாசிவம்(99424-64209), திரு.பொ.பழனி(92624-70516) ஆகியோர் தலைமையிலான பறக்கும் படையினரும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பணியாற்றவுள்ளனர்.

தேர்தல் விதிமீறல்கள் குறித்த புகார்கள் மற்றும் ஆய்வின் அடிப்படையில் வரப்பெறும் புகார்களின் மீது பறக்கும் படையினர் உடனடியாக செயல்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சித்தேர்தல் குறித்த புகார்களை தெரிவிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை 04324-255104 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.**